DEPOSITION OF WITNESS

Chapter XXIII code of Criminal Procedure

**IN THE COURT OF SESSIONS JUDGE,**

NAGAPATTINAM.

**Spl. Sessions Case No. 38-2021**

**Deposition of Witness for Prosecution : D.W. 1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ராஜேந்திரன் | தகப்பனார் பெயர்/ கணவர் பெயர் | : | |
| ஊர் | : | | தாலுக்கா | : | |
| ஜாதி | : | | வயது | : | |
| மதம் | : | | தொழில் | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 day of 18.03.2026

**முதல் விசாரணை**

நான் வேதாரண்யம் தாலுக்கா கடிநல்வயல் கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் ரோஷர் வெல்டிங் வொர்க்ஸ் என்ற பெயரில் கடிநல்வயல் ஜெரால்டு கடையில் இருந்து 20 மீட்டர் வெல்டிங் கடை நடத்தி வருகிறேன். நான் 2000ம் ஆண்டு முதல் மேற்கண்ட தொழில் செய்து வருகிறேன். காலை 10.00 முதல் 9.00 மணிவரை பார்ப்பேன். வேலை கூடுதலாக இருந்தால் விடியற்காலை 4.00 மணிவரை பார்ப்போம். ஆஜர் எதிரிகள் திரவியம், தமிழ்செல்வன் இருவரையும் தெரியும். நான் மேற்கண்ட வொர்க் சாப்பில் 05.09.2021ந் தேதி என்னுடைய டேக்டர் பழுதடைந்த காரணத்தால் இரவு 8.00, 9.00 மணிக்கு பார்த்துகொண்டிருந்தேன் கரண்ட் போய் போய் வந்ததால் அன்று இரவு 12.00 மணிவரை பார்த்தோம். நானும் என்னுடைய தம்பி ராஜாவும் வேலை பார்த்தோம். ஜெரால்டு கடைக்கு அருகே அன்றிரவு எந்த சம்பவமும் நடைபெறவில்லை. என்னுடைய வெல்டிங் கடைக்கும் ஜெரால்டு கடைக்கும் 20 அடி தூரம் தான் இருக்கும். மறுநாள் நான் கேள்விபட்டது என்னவென்றால் முதல் நாள்

மனோகரன் குடித்துவிட்டு சைக்கிளில் போகும் போது அடிப்பட்டு ஆஸ்பத்திரியில் இருப்பதாக கேள்விபட்டேன்.

**<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் முதல் விசாரணையில் சொல்லப்பட்ட முகவரியில் நான் பிறந்த தேதியில் இருந்து குடியிருந்து வருகிறேன். இறந்ததாக சொல்லப்படும் மனோகரன் எனது ஊர்க்காரர். அவர் சின்ன வயதிலிருந்தே எனக்கு தெரியும். 05.09.2021ந் தேதி அன்று எனது வண்டி பழுதடைந்ததால் சாமான் வாங்க வந்தேன். இறந்துபோன மனோகரன் வீட்டிற்கும் எனது வாகனத்தை பழுது பார்க்கும் கடைக்கும் 500 மீட்டர் தூரம் இருக்கும். சம்பவம் நடந்த நேரம் இரவு நேரம் மின்சாரம் இல்லை, மழை பெய்துகொண்டிருந்தது. அதனால் என்ன நடந்தது என்ற விபரம் எனக்கு தெரியாது. ஆஜர் எதிரி எனக்கு நெருக்கமான நண்பர் என்பதால் பொய் சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல.